No. of Printed Pages : **2**

100496

# GS-134

II Semester B.Com./B.B.A./B.H.M. Examination, May/June 2019

**TAMIL LANGUAGE**

**(PART-I) (PAPER-II)**

(F+R) (CBCS) (2014-15 & Onwards)

Time : 3 Hours  Max. Marks : 70

**I.** **விரிவான விடை தருக.**

**1.** திருப்பிரம்மபுரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் குறித்து திருஞானசம்பந்தர் கூறியுள்ள செய்திகள் யாவை ? **10**

அல்லது

மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பியிடம் கூறும் செய்திகளைத் தொகுத்து வரைக.

**2.** தனிப்பாடல்கள் கூறும் ஔவையாரின் நீதிக் கருத்துகளைத் தொகுத்து வரைக. **10**

அல்லது

ஒட்டக்கூத்தரின் கவித்திறத்தைப் புலப்படுத்துக.

**II.** **இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**1.** போதொடு நீர்சுமந்து ஏத்திப் **4**
புகுவார் அவர்பின் புகுவேன்

அல்லது

இம்மா யப்பிறவி
பிறந்தேஇறந்து எய்த்தொழிந்தேன்.

**2.** வளர்ந்த மடல்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும் **4**
தளர்ந்தோர்க்கு ஒன்று ஈயார் தனம்.

அல்லது

வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரே

**P.T.O.**

**III. இரண்டிற்கு ஆசிரியர் குறிப்பு வரைக.** **2x3=6**

1. திருநாவுக்கரசர்
2. சுந்தரர்
3. ஔவையார்
4. புகழேந்தி

**IV. எவையேனும் இரண்டினைத் திறனாய்க.** **2x14=28**

1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ?
2. அதை மறந்திட்டிங்களேய்யா!
3. இடியுடன் கூடிய மழை நாளில்
4. வெறுங் கூட்டுக்குள் .....

**V. மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக.** **8**

இந்தியா 1947 -இல் விடுதலை பெற்று, 1950 -இல் ஒரு ஜனநாயகக் குடியரசாக மலர்ந்தது. எல்லா அம்சங்களிலும், புதிய இந்தியாவை இந்தியமயப்படுத்த வருங்காலத் தலைமுறையினரின் கல்வியில் கல்வியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். முதன்மையாகக் கல்வியை இந்தியமயமாக்க வேண்டும் என்று அன்றைய இந்தியப் பெரியார்கள் விரும்பினார்கள். மகாத்மா காந்தி, டாக்டர் அப்துல் கலாம் ஆசாத், டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலிய அக்காலப் பேராளுமைகள் இந்தியக் கல்வியை இந்தியமயப்படுத்தப் பல வழிகளைக் காட்டியுள்ளார்கள். எல்லா வளர்ச்சிகளுக்கும் மூலமாக இந்திய அறிவியலும், அறவியல், அழகியலும் அமைய வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். பல அம்சங்களில் இந்த நோக்கங்கள் பெருமளவு நிறைவேறி வருகின்றன. தாய்மொழி முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. தாய்மண்ணின் வரலாறும், புவியியலும் கவனம் பெறுகின்றன.

ஆனாலும் ஆங்கில இலக்கியத்தைப் பொறுத்தவரையில், இன்றும் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஆங்கிலேயரின் படைப்புகள், குறிப்பாக இங்கிலாந்து மக்களையும், மரபுகளையும், பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட ஆங்கிலேய அறிஞர்களின் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், நாவல்கள் முதலியன பெருமளவு மேற்கத்திய நாடுகளில் இருந்தே பெறப்பட்டு நம் நூல்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது வருத்தம் தருகின்ற ஒரு செயல். இந்திய ஆங்கிலக் கல்வியில் இது ஒரு பின்னோக்குச் செயல்.

-oOo-